டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.06.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 289 - Madurai | Online Edition

# 2026க்குள் 75 லட்சம் வீடுகளில் சூரிய சக்தி மின்சாரம் : மத்திய அமைச்சர் உறுதி!

புது தில்லி, ஜூன் 5

பிரதமரின் சூரிய இல்ல இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ், வரும் டிசம்பர் 2026-க்குள் 75 லட்சம் வீடுகளில் சூரிய சக்தி மின் உற்பத்தி உள்கட்டமைப்பை நிறுவ இலக்கு நிர்ணயித்துள்ளதாக மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் இரண்டு ஆண்டு நிறைவு விழாவில் பேசுகையில், இத்திட்டம் தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் ஏற்கனவே 40 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இதன் மூலம் பயன் அடைந்துள்ளனர். முன்பு 1 லட்சம் வீடுகளை இத்திட்டத்தில் இணைக்க 118 நாட்கள் தேவைப்பட்ட நிலையில், தற்போது தொழில் நுட்ப மேம்பாட்டினால் வெறும் 8 நாட்களுக்கும் குறைவான காலமே தேவைப்படுகிறது. குறிப்பாக, கடந்த மே 2026-ல் மட்டும் ஒரே மாதத்தில் சாதனை அளவாக 3.16 லட்சம் வீடுகளில் சூரிய தகடுகள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 17 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் 'பூஜ்ஜிய' மின் கட்டணப் பலனைப் பெற்று, தங்களது குடும்பப் பொருளாதாரத்தில் நேரடிச் சேமிப்பை அடைந்து உள்ளனர். இதுவரை இத்திட்டத்திற்காக ரூ.22,750 கோடிக்கும் மேல் மானியம் தங்குதடையின்றி வழங்கப்பட்டுள்ளது. மேற்கு ஆசிய நெருக்கடியால் உலகளவில் எரிசக்தி தட்டுப்பாடு நிலவும் இவ் வேளையில், இத்திட்டம் இந்தியாவின் ஆற்றல் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், வரும் 2047-க்குள் நாட்டின் அனைத்து வீடுகளிலும் சூரிய ஒளி மின்சாரம் பயன்பாட்டிற்கு வரும் என்றும், இதன் பரா மரிப்புப் பணிகள் மூலம் ஆண்டுக்கு 3.3 லட்சத்திற்கும் அதிகமான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்த விழாவில் திட்டத்திற்கான புதிய இலட்சினை மற்றும் வாட்ஸ்அப் பாட் சேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

# ஆடிப்பட்டம் தேடி விதைப்போம்!

பட்டம் பார்த்து பயிர்செய் என்ற பழமொழிக்கு ஏற்ப ஆடிப்பட்டம் நெல், சிறுதானியங்கள், பயறுவகை பயிர்கள் மற்றும் காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய உகந்த பட்டமாகும். ஆடி பட்டத்தில் தேடி விதைப்பதன் மூலம் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன் அறுவடை செய்ய முடியும்.

இதனால், அறுவடை காலங்களில் ஏற்படும் சேதாரங்களைத் தவிர்க்க இயலும். மேலும் இக்கால கட்டத்தில் பயிர் முளைப் பத்திலிருந்து அறுவடை வரை நிலவும் தட்பவெட்ப நிலைகள் பயிர்களை நன்கு வளர்ச்சி செய்யவும். பூச்சி மற்றும் பூஞ்சாண நோய்களின் தாக்குதலையும் குறைக்கின்றது.

அதனால், ஆடி பட்டத்தில் விதைக்கும் பயிர்கள் அனைத்தும் நல்ல விளைச்சல் கொடுக்கும் திறன் கொண்டது. விவசாயிகள் பயிர் மற்றும் இரகத்தை தேர்வு செய்யும் போது எந்த சந்தைக்கு எந்த ரகம் ஏற்றது என்பதை அறிந்து தேர்வு செய்ய வேண்டும். மேலும் தேர்வு செய்த ரகத்தில் நல்ல தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விதைப்பதன் மூலம் மட்டுமே குறைந்த செலவில் அதிக மகசூல் பெற முடியும். விவசாயிகள் தங்கள் பயன்படுத்த இருக்கும் விதை தரமானது தானா? என்பதை அறிந்து கொள்ள பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ. 80/– கட்டணமாக செலுத்தி தங்கள் விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ளலாம்.

ஆய்வு முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும். விவசாயிகள் தங்கள் பகுதிகளில், ஆடிப்பட்டத் திற்கு ஏற்றப் பயிர் ரகம் மற்றும் சான்று பெற்ற விதைகளை தேர்ந்தெடுத்து அதற்கு உரிய சாகுபடி தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து நல்ல விளைச்சலையும், லாபத்தையும் ஈட்ட வேண்டும் என்று விதை பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ச.முருகேஸ்வரி மற்றும் ப.வீரபாண்டியன் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், ஜூன் 5

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஜூன் 2026 மாதத்திற்கான பயிற்சி, 08.06.26 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி எண் : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@ tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**காரா பூந்தி பச்சடி சாட்**

**தேவையான பொருள்கள்**

தயிர் ஒரு கப்

காரா பூந்தி அரை கப்

சாட் மசாலா பொடி ஒரு தேக்கரண்டி கொத்தமல்லி சிறிதளவு

உப்பு தேவையான அளவு

**செய்முறை**

தயிரை கெட்டியாக கடைநது வைத்துக்கொள்ள வேண்டும்,

இதனுடன் காரா பூந்தி, சாட் மசாலா பொடி, தேவையான உப்பு, கொத்தமல்லி பயன்படுத்தலாம். இது உடனடியாக செய்யக்கூடியது.

நல்ல ருசியாகவும் மிகவும் அசத்தலாகவும் இருக்கும். அனைவரும் விரும்பி சாப்பிடக்கூடிய ஒரு மாலை நேர சிற்றுண்டி இதுவாகும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

நாளை தொடரும்...



# அரியலூர் மாவட்டத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு தேனி வளர்ப்பு பயிற்சி நடந்தது



அரியலூர், ஜுன் 5

அரியலூர் மாவட்டத்தில், அரியலூர் வட்டாரம் மணக்குடி கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் தேனீ வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக வேளாண்மை அறிவியல் ஆய்வு நிலைய விஞ்ஞானி திருமலைவாசன் கலந்து கொண்டார். உதவி வேளாண்மை அலுவலர் ஸ்ரீதேவி, ஆத்மா திட்டத்தின் மூலம் வட்டார தொழில்நுட்ப அலுவலர் சக்திவேல் மற்றும் அன்பழகன் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், தேனீக்களின் வகைகள், தேனீக்களின் முக்கியத்துவம், தேனீக்கள் எவ்வாறு விவசாயிகளுக்கு உதவி செய்கிறது என்ற வகையில், தொழில்நுட்பங்களை எடுத்துரைத் தார். விவசாயிகளிடம் சுற்றுப்புற சூழ்நிலை தூய்மை அடையாமல், விவசாயத்தில் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு இயற்கையில் கிடைக்கக்கூடிய அனைத்து இயற்கை எரு உரங்களை அதிகளவு அடி உரமாக பயன்படுத்த வேண்டும். அனைத்து வகையான உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம் பாக்டீரியா, பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா, துத்தநாக பாக்டீரியா மற்றும் நுண்ணூட்ட உரங்கள், பசுந்தால் பயிர் சாகுபடி, பசுந்தலைப் பயிர் சாகுபடி முறை, அசோலா,நீல பச்சை இயற்கை பூச்சி விரட்டி மற்றும் உயிரியல் காரணிகளான சூடோஸ்மோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி பயன் படுத்தி பயிர்களை தாக்கக்கூடிய நோயிலிருந்து பாதுகாக்கலாம் மற்றும் மண் ஆய்வுப்படி பயிருக்கு தேவையான உரங்களை அளவான முறையில் சமச்சீர் வகையில் அனைத்து வகையான உரங்களை பயன்படுத்தி விவசாய செய்யும் போது சுற்றுப்புற சூழ்நிலை பாதிப்படையாமல் தேனீக்களின் இயக்கம் அதிகப்படுத்தி தேனீக்கள் மூலம் மகரந்த சேர்க்கை அதிகப்படுத்தும். மேற்கண்ட வகையில் விவசாயிகள் ஒருங்கிணைந்த உரம் மேலாண்மையுடன், இயற்கை பூச்சி விரட்டி, உயிரியல் காரணிகளை பயன்படுத்தும் போது மண்ணின் வளம் காப்பது மட்டுமில்லாமல், நன்மை செய்ய

கூடிய பூச்சிகளும், தேனீக்களும் பயிர்களில் மகசூல் அதிகரிக்க உதவி செய்யும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெளிவாக விவசாயி களுக்கு எடுத்துரைத்தார்.

வேளாண்மை விஞ்ஞானி திருமலைவாசன், தேனீக்களின் முக்கியத்துவம் மற்றும் தேனீக்களினால் ஏற்படும் நன்மைகள் தேனிகளினால் பயிர்களில் மகசூல் அதிகரிப்பது பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த பயிற்சியில் வேளாண்மை உதவி அலுவலர் ஶ்ரீதேவி பயிற்சியை ஒருங்கிணைந்தனர். ஆத்மா திட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் சக்திவேல் மற்றும் அன்பழகன் சிறப்பாக ஏற்பாடு செய்து, நன்றி உரையாற்றினார்கள்.

## விளைநிலங்களை காப்போம் இயக்கம் மற்றும் விவசாயிகள்–விஞ்ஞானிகள் கலந்துரையாடல்




விருதுநகர், ஜூன் 5

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில், விளைநிலங்களை காப்போம் இயக்கம் மற்றும் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இதில் திருவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் விருதுநகர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பருத்தி ஆராய்ச்சி நிலையம் தலைவர் மற்றும் பேராசிரியர் மற்றும் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அங்கக வேளாண்மை, இயற்கை வேளாண்மை, சமச்சீர் உர பயன்பாடு போன்ற தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தனர் மேலும் பண்ணை கழிவுகளான தென்னை மட்டைகள் பருத்திமார்கள், களைச்செடிகள், மக்காச்சோளம் தட்டைகள் போன்றவற்றைக் கொண்டு மக்க வைத்து இயற்கை உரம் தயாரிப்பது பற்றி செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடு திருவில்லிபுத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தலைமையிலான அட்மா பணியாளர்கள் மற்றும் உதவி வேளாண்மை இயக்குனர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் எஸ்.புதூர் வட்டாரத்தில் பண்ணை பள்ளி பயிற்சி

புதுக்கோட்டை, ஜூன் 5

புதுக்கோட்டை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம் (பூசாரிபட்டி) கிராமத்தில் சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய பண்ணை பள்ளி பயிற்சி நடத்தபட்டது. இப்பயிற்சிக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் சரவணன், தலைமை வகித்தார். துணை வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டு முன்னிலை வகித்தனர்.




சி.சேதுபதி, மண்ணியல் வல்லுநர் KVK – குன்றகுடி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். நிலம் தேர்வு விதை தேர்வு பருவங்களுக்கு ஏற்ற இரகம் தேர்வு செய்தல் போன்ற தொழில்நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். மற்றும் சமச்சீர் உர மேலாண்மை என்பது பயிரின் தேவை மண்ணின் வளம் மற்றும் தட்ப வெப்பநிலை போன்றவற்றிற்கு ஏற்ப தழை சத்து, சாம்பல் சத்து, மணி சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை சரியான விகிதம் சரியான நேரம் மற்றும் சரியான முறைகளில் பயன்படுத்தும் வழிமுறையாகும். மண்வளத்திற்கு ஏற்ப கரிம உரங்கள் உயிர் உரங்கள் இரசயன உரங்கள் போன்றவற்றை தேவைகேற்ப மற்றும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் மண் வள அட்டையின் பரிந்துரைகளின் படி பயன்படுத்தவேண்டும். இதனால் மண்ணின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் மேம்படும் அதன் மூலம் தரமான மற்றும் அதிக விளைச்சல் கிடைக்கும். தேவையற்ற உரங்களின் பயன்பாடுகள் தவிர்க்க படுவதால் விவசாயிகளுக்காக செலவு குறையும்.

பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதன் மூலம் சுற்றுசூழல் பாதிக்கபடாத வகையில் தழை சத்து மண்ணில் அதிகரிக்கலாம். அதன் மூலம் யூரியா மற்றும் அம்மோனியா சல்பேட் போன்ற தழை சத்து உரங்களின் பயன்பாட்டினை வெகுவாக குறைக்கலாம் போன்ற தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் பாலமுருகன் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரித்தல் மற்றும் மண் ஆய்வின்படி உரமிடுதலின் முக்கியத்துவம் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

அவர்கள் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரித்தல் மற்றும் அதன் பயன்கள் பற்றியும் விதை நேர்த்தி செய்து விதைக்கும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள தலைமணி மற்றும் சாம்பல் சத்துக்களை பயிர்கள் எளிதாக எடுத்து கொள்ளும் வகையில் மாற்றி தரப்படுகிறது. மேலும் பயிர் வளர்ச்சியினை நிலைகளுக்கு ஏற்ப அடி உரம் தூர்கட்டும் பருவம் பூக்கும் பருவம் என பிரித்து உரங்களை இடுவதால் சத்துக்கள் வீணவது என்பது வெகுவாக குறைக்கபட்டு விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்கும் வாய்ப்புள்ளது என விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் மண் மாதிரி சேகரித்தல் உயிர் உரங்கள் நெல் நுண்ணூட்டம் பாரம்பரிய நெல் இரகங்களின் விதைகள் இலை வண்ண அட்டை போன்ற பொருட்கள் கண்காட்சியாக விவசாயிகள் பார்வைக்கு வைக்கபட்டிருந்தது.

உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய்ஆனந்த், பயிற்சிக்கு உண்டான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தார் மற்றும் பயிற்சியின் முடிவில் விவசாயிகளுக்கு நன்றியினை தெரிவித்தார்.

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் உலகசுற்றுச் சூழல் தினவிழா கொண்டாட்டம்



திருச்சி, ஜூன் 5

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 05.06.26 அன்று உலக சுற்றுச்சூழல் தினவிழா கொண்டாடப் பட்டது.

முசிறி வட்டம் முத்தையநல்லூர் கிராமத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். முனைவர் மு.சகிலா, இணைப்பேராசிரியர், மரம் வளர்ப்பின் நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மரங்களின் பங்கு பற்றி கூறினார். கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் அன்பானந்தன், புவி மாசுபாடு, பருவநிலை மாற்றம் மற்றும் மண்வள பாதுகாப்பு போன்ற தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வு வழங்கினார். தொட்டியம் வட்டாரம், நத்தம் கிராமத்தில் முனைவர் ராதிகா, இணைப்பேராசிரியர், உலக சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வழங்கினார். துறையூர் வட்டாரம் நல்லவன்னிப்பட்டியில் முனைவர் தனலட்சுமி இணைப்பேராசிரியர், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதில் வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் ஆத்மா திட்டத்தின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐபிஎல் திட்டத்தின் தொழில்நுட்ப உதவியாளர்கள் கமலி மற்றும் பாலசுப்ரமணியன் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டனர். இறுதியாக மரக்கன்றுகள் நடப்பட்டு விவசாயி களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப் பட்டன. இந்நிகழ்ச்சி யில் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# பயறுவகைகளை பதப்படுத்தும் நிலையம் அமைக்க மானியம் தெரியுமா?

தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தாலும் நாம் பயறுவகைகளுக்கு வெளிநாடுகளை நம்பி தான் உள்ளோம். பயறுவகை உற்பத்தியில் அரசு என்னெவோ திட்டங்களை (மினிகிட் திடல், விதை நேர்த்தி மானியம் ஊட்டசத்துகள் கரைசல் (DAP) தெளிப்பு மானியம்) போன்றவற்றை வழங்கி



னாலும் விவசாயிகள் பயறு சாகுபடியில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. மத்திய, மாநில அரசின் முயற்சி தொடர்ந்து பயறு சாகுபடியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதே நீண்ட கால நோக்கமாகும். அதற்கேற்ப புதியதாக பொறுப்பு உள்ள தமிழக அரசு வருகிற 2025-26 ஆம் ஆண்டில் தீவிர இயக்கம் செயல்படுத்த பட்டு வருகிறது. அதில் ஒன்று தான் பயறுவகைகளை பதப்படுத்தப்படும் நிலையம் அமைக்க மானியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



**என்னென்ன பயறு வகை களை பதப்படுத்தலாம்?**

உளுந்து, பாசிபயறு, துவரை, தட்டைபயறு, கொண்டக்கடலை போன்ற பயறுவகைகளாகும்.

**மானியம் எப்படி?**

உற்பத்தியான பயறுவகைகளை பதப்படுத்தி மதிப்புக் கூட்டப் பட்ட பொருளாக மாற்றி சந்தைபடுத்த ஏதுவாக இந்த நிலையம் அமையும். இதில் நவீன இயந்திரங்களின் உதவியால் கிளினிங் டிரையர் பேக்கேஜ் போன்ற பணிகளை மேற்கொள்ள லாம். இந்த நிலையம் அமைக்க 33% மானியமாக அதிகபட்ச மாக 25 லட்சம் வரை நிகழ் நிதியாண்டில் வழங்கபடவுள்ளது.

**எந்த எந்த மாவட்டங்களுங்கு இந்த திட்டம் பொருந்தும்?**

அனைத்து மாவட்டங்கள் (நீலகிரி, சென்னை, கன்னியா குமரி, திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக).

**யார் யார் தகுதியானவர்கள்**

ஆர்வமுள்ள விவசாய உற்பத்தியாளர் குழுக்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தனிநபர்கள் இந்த திட்டத்தில் சேர்ந்த பயன்பெறலாம்.

**யாரை அணுகுவது**

அந்த அந்த மாவட்டத்தில் உள்ள வேளாண் வணிக துணை இயக்குநரை வரும் ஜுன் 12க்குள் தொடர்பு கொள்ள வேண்டுமென அறிக்கை தெரிவிக்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம்

சிவகங்கை, ஜூன் 5

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் புதுதில்லியின் கீழ் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் மூலமாக இந்திய அளவிலான வேளாண் விளைநிலங்களை பாதுகாப்பதற்க்கான விழிப்புணர்வு முகாம் (கேத்பச்சாவ் அபியான் – Khet Bachao Abhiyan) ஜூன் 1 முதல் 30 வரை நடைபெறுகிறது. விழிப்புணர்வு முகாம் இளமனூர் கிராமத்தில் 04.06.26 அன்று இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன், தலைமையில் நடத்தப் பட்டது.




இத்திட்டத்தின் நோக்கம் மண் வளத்தின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்தி மண் வளத்தை பாதுகாத்தல் பயறு வகைகள் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடிக்கு சமச்சீர் உரப்பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் பசுந்தாள் உர பயிர்களை பயிரிட்டு மண்ணை காக்க அங்கக வேளாண்மை சாகுபடி செய்திடல் வேண்டும். மேலும் பருத்தி சாகுபடி செய்வது குறித்தும் மண் மேலாண்மை உர மேலாண்மை விதை நேர்த்தி செய்வது குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் அட்மா திட்ட அலுவலர்கள் கி.கோகிலா, சதீஸ் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் சண்முகசுந்தரம் ஆகியோர்கள் முகாமில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மை துறை சார்ந்த திட்டங்களை எடுத்துக்கூறினார்.

# இப்கோ – நானோ டி.ஏ.பி – ஒரு பார்வை

சென்னை, ஜுன் 5

நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பியைப் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத் தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

பயன்படுத்தும் முறை : ஒரு மூடி நானோ டி.ஏ.பி பாட்டிலின் அளவு = 25 மி. லி)

**விதை நேர்த்தி :** ஒரு கிலோ விதைக்கு, 3 – 5 மி.லி நானோ டி.ஏ.பியைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து, 25 முதல் 30 நிமிடம் வரை வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

**வேர்/கிழங்கு/கரணை நேர்த்தி :** தேவையான அளவு நீரில் நானோ டி.ஏ.பி திரவத்தை, ஒரு லிட்டர் நீருக்கு, 3–5 மி.லி என்ற அளவில் கலந்து நாற்றுகள்/கிழங்குகள்/கரணைகளை 20–30 நிமிடம் ஊற வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

**இலைவழி தெளிப்பு :** 2–4 மி.லி நானோ டி.ஏ.பி–யை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான (கிளைப்பு, துளிர்விடும்) தருவாயில் தெளிக்க வேண்டும்.

அதிகமாக மணிச்சத்து தேவைப்படும் பயிர்கள் மற்றும் நீண்ட கால பயிர்களுக்கு நானோ டி.ஏ.பி யை இரண்டாம் தெளிப்பாக பூக்கும் பருவத்திற்கு முன் தெளிக்கவும்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# எல் நினோ தாக்கம் : விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்

சேலம், ஜூன் 5

பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகரிக்கும் நிகழ்வே எல் நினோ (El Niño) எனப்படுகிறது. இந்த நிகழ்வு உலகளாவிய வானிலை மாற்றங்களை ஏற்படுத்துவதுடன், இந்திய பருவமழையையும் பாதிக்கும் திறன் கொண்டது. இந்த ஆண்டு எல் நினோ தாக்கத்தால் இந்தியாவில் பருவமழை சராசரியை விட குறைவாக இருக்க வாய்ப்புள்ளதாக வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன் விளைவாக மழைப்பொழிவு குறைதல், அதிக வெப்பநிலை, நீண்ட வறட்சி காலம், நிலத்தடி நீர்மட்ட சரிவு மற்றும் பாசன நீர் பற்றாக்குறை போன்ற சூழல்கள் உருவாகலாம். பருவமழை தாமதமாக தொடங்குதல் அல்லது குறைவாக பெய்தல், நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களில் நீர் இருப்பு குறைதல், பயிர்களின் வளர்ச்சி பாதிப்பு மற்றும் மகசூல் இழப்பு, கால்நடைகளுக்கு தீவன மற்றும் குடிநீர் பற்றாக்குறை, வெப்ப அலைகள் அதிகரித்து மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் உடல்நல பாதிப்பு எல் நினோவால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் ஆகும். எனவே விவசாயிகள் குறைந்த நீரில் வளரக்கூடிய துவரை, உளுந்து, பாசிப்பயறு, கொள்ளு, எள்ளு போன்ற பயறு வகைகளை சாகுபடி செய்தல். சோளம், கம்பு, தினை, வரகு, குதிரைவாலி உள்ளிட்ட சிறுதானிய பயிர்களுக்கு முன்னுரிமை அளித்தல், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு பாசன முறைகளை பயன்படுத்தி நீரை சிக்கனமாக கையாளுதல், எல் நினோ தாக்கத்தால் ஏற்படக்கூடிய இழப்புகளை குறைக்க, விவசாயிகள் வானிலை முன்னறிவிப்புகளை தொடர்ந்து கவனித்து, மாற்றுப் பயிர் மற்றும் நீர் மேலாண்மை நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# அட்மா திட்டத்தின் கீழ் பயிர் காப்பீட்டு விழிப்புணர்வு உள் மாவட்ட விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, ஜூன் 5

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் (SSEPERS) அட்மா திட்டத்தின் கீழ் செட்டியேந்தல் கிராமத்தில் பயிர் காப்பீட்டு விழிப்புணர்வு குறித்து உள்மாவட்ட விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் அறிவுரையின்படி வேளாண்மை அலுவலர் சிவபிரிய தர்ஷினி தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் விளைநிலங்களை காப்போம் இயக்கம் குறித்து விளக்கமளித்தார்.



பஜாஜ் பயிர் காப்பீடு மாவட்ட மேலாளர் காளிராஜ், பயிர் காப்பீட்டு பயிர் இழப்பு ஏற்படும் போது விவசாயிகளுக்கு நிதி உதவி அளித்து அதன் மூலமாக பயிர் உற்பத்தியை அதிகப் படுத்துதல்,. விவசாயிகளை முற்போக்கான சாகுபடி முறைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்களை உபயோகப்படுத்த ஊக்குவித்தல், விவசாய கடன் வழங்கும் முறையினை தடையின்றி வைத்திருக்க உதவுதல் பற்றி எடுத்துரைத்தார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் தியாகராஜன், விவசாய அடையாள எண், பி.எம்.கிசான் நிறைவுறல் இயக்கம் பற்றி எடுத்துரைத்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் சூர்யா, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் சமச்சீர் உரமேலாண்மை பற்றி கூறினார்.

இப்பயிற்சியின் முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் செலின், நவநீதகிருஷ்ணன், உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மாணவனுக்கு ஒரு மரம் விழிப்புணர்வு தொடக்க விழா

மதுரை, ஜூன் 5

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் & சமுதாயக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையதில் பயிலும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரம் வளர்ப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் மாணவனுக்கு ஒரு மரம் என்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.




இந்த நிகழ்ச்சியை முனைவர் சந்திரமணி, முதல்வர், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை, தொடங்கி வைத்து தனது தலைமையுரை மரங்கள் தான் பூமியின் நுரையீரல், அவை நமக்கு உயிர்வாழத் தேவையான ஆக்ஸிஜனைத் தந்து, கார்பன்-டை-ஆக்சைடை உட்கிரகிக்கின்றன. மழைக்கு உதவுவதோடு, மண் அரிப்பைத் தடுத்து, சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுகின்றன. மேலும், பல வகையான பழங்கள், மூலிகைகள் மற்றும் நிழலையும் வழங்கி மனித குலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய் கின்றன. உலகம் நாளுக்கு நாள் பருவநிலை மாற்றங்கள் நடைபெற்று உலக வெப்பமயமாதலை நாம் உணர்ந்து கொண்டு வருகிறோம். இந்த சூழ்நிலையை கட்டுப்படுத்த மரங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. மரங்களை நாம் பராமரித்தால் மரங்கள் நம்மை காக்கும், எனவே தான் மரங்கள் வளர்ப்பின் முக்கியத் துவத்தை மாணவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் கல்லூரி வளாகத்தில் 350க்கும் மேற்பட்ட மர கன்றுகள் நடப்பட்டு அம்மரங்களை ஒவ்வொரு மாணவருக்கும் அதை பராமரிக்க ஒதுக்கீடு செயப்பட்டு அந்த மரத்திற்கு அருகே ஒதுக்கீடு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் எழுதப்பட்டு உள்ளது.

அதை ஒவ்வொரு நாளும் மாணவர்கள் நன்றாக பராமரிக்க வேண்டும் என கேட்டு கொண்டார்.

மேலும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம், மரம் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை அனைவரும் வளர்த்து கொள்ள வேண்டும் என கூறினார். இந்த நிகழ்ச்சியை முனைவர் சித்ரா, முனைவர் ஆரோக்கிய மேரி, முனைவர் வேணுதேவன் ஒருங்கிணைத் தனர். இந்த நிகழ்ச்சியில் 350 மாணவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர்.



# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!



கோயம்புத்தூர், ஜூன் 5

தென்மேற்குப் பருவமழை தொடங்க உள்ளதால் விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளை விதைப்பரிசோதனை செய்து விதைப்பது மிக அவசியம் என கோவை விதைப்பரிசோதனை அலுவலர் தெரிவிக்கிறார். கோயம்புத்தூர் மற்றும் தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பருவமழை தீவிரமாக இருக்கும். இக்காலகட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் இரகங்கள் நல்ல விளைச்சலைக் கொடுக்கும் திறன் கொண்டவை. விவசாயிகள் தங்கள் வயல் சூழ்நிலைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற நெல் இரகங்களை தேர்வு செய்து விதைப் பரிசோதனை செய்து கொள்வது மிக அவசியம்.

மானாவாரிப் பயிர்களான சோளம், பருத்தி, உளுந்து, தட்டைப் பயறு, நிலக்கடலை மற்றும் சிறு தானியங்களை பருவ மழையின் தொடக்கமான ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் விதைப்பது சிறந்தது, விதைப்பதைத் திட்டமிடுவதற்கு முன் விதைகளை விதைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். விதைப்பரிசோதனை மூலம் விதைப்புக்குத் தகுதியான விதைகளின் தரம் நிர்ணயிக்கப் படுகிறது. வீரிய விதைகளே தரமான விதை உற்பத்தி மற்றும் நல்ல மகசூலுக்கு அடிப்படையாகும் விதைப்பரிசோதனை என்பது விதை களின் புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் ஆகியவற்றை அறியும் முறையாகும். முளைப்புத்திறன் சோதனை என்பது விதைகள் எவ்வளவு சதவீதம் முளைக்கும் என்பதைக் கண்டறியும் முறை, புறத்தூய்மை சோதனை என்பது விதைகளில் உள்ள கல், மண் மற்றும் பிற விதைக்கலப்பு ஆகியவற்றைக் கண்டறிவதாகும். ஈரப்பத சோதனை என்பது விதைகளின் ஈரப்பதம் முளைப்புத் திறன் மற்றும் விதை சேமிப்பைப் பாதிக்காத அளவில் உள்ளதா என்பதை அறிவதாகும்.

எனவே, நெல்லுக்கு 50 கிராம், மக்காச்சோளத்திற்கு 500 கிராம், சோளத்திற்கு 100 கிராம், உளுந்து, பச்சைப்பயறு, கொள்ளு போன்ற வற்றிற்கு 100 கிராம், தட்டைக்கு 150 கிராம், நிலக்கடலைக்கு 500

கிராம், தக்காளி, காலிபிளவர், கத்தரி, வெங்காயம், முட்டைக்கோஸ், நூல்கோல், முள்ளங்கி மற்றும் மிளகாய் விதை மாதிரிகளுக்கு 10 கிராம் கேரட், பீட்ரூட் மற்றும் கீரை வகைகளுக்கு 50 கிராம், பூசணி, சுரைக்காய், வெண்டைமற்றும் தர்பூசணிக்கு 100 கிராம், பாகல் மற்றும் புடலை போன்றவற்றிற்கு 250 கிராம் என்ற அளவில் விதை மாதிரிகள் கொடுத்து விதைப்பரிசோதனை செய்து விதை முளைப்புத்திறன் அறிந்து பயிரிடுமாறு கோவை, விதைப் பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார்.

அணுக/அனுப்ப வேண்டிய முகவரி : விதைப்பரிசோனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், 1424 தடாகம் சாலை, கோவை - 641 013.

# சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த விவசாயிகள் பயிற்சி



திண்டுக்கல், ஜூன் 5

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டம், தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை விவசாய நிலத்தை காப்போம் இயக்கத்தின் மூலம் இயற்கை விவசாயம் மற்றும் சமச்சீர் உரப் பயன்பாடு குறித்த விவசாயிகள் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாமில் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயத்தின் நன்மைகள் மண் ஆரோக்கியம் மற்றும் நுண்ணூட்டம் மற்றும் வேளாண்மை சமச்சீர் புற பயன்பாடு பசுந்தால் உரம் இயற்கை உரங்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆரோக்கியமான உணவு பழக்கம் என்னை பயன்பாடு, சாகுபடி செலவு குறைப்பு நிலையான விவசாயம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி மண்வளத்தை பாதுகாப்போம் விவசாய நிலத்தை நிலை நிறுத்துவோம் உணவை பாதுகாப்போம் போன்ற வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் மூலம் விவசாயிகளுக்கு அனைத்து வட்டாரங்களில் இருந்து பயிற்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வேளாண்மை இணை இயக்குனர் அறிவுரையின்படி நடத்தப்படு கிறது. இதில் அப்பகுதி வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண் அலுவலர், வேளாண்மை உதவி அலுவலர் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு சிறப்பாக உர பயன்பாடு குறித்தம் விவசாயிகளுக்கு பயிற்சி நடத்தபடுகின்றது.

# நிறைவான மகசூல் பெற விதைப்பரிசோதனை அவசியம்

சிவகங்கை, ஜுன் 5

‘விளையும் பயிர்முளையிலே தெரியும்’ என்பது பழமொழி. தரமான விதைகளைப் பயன்படுத்தினால் மட்டுமே விதைகள் சீராக முளைத்து தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, களப்படமில்லாத பயிர் மற்றும் ஒரே நேரத்தில் அறுவடைக்கு வந்து அதிக மகசூல் கிடைப்பதுடன் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். விவசாயத்தில் அதிக மகசூல் பெற்று லாபம் பெற தரமான இடுபொருட்களை பயன்படுத்துதல் அவசியமாகும். இடுபொருட்களில் முக்கியமானதும் முதன்மையானதும் தரமான விதையாகும். தரமான விதை என்பது நல்ல முளைப்புத்திறன், சுத்தத்தன்மை, பிறரகக் கலவன் இன்றி இருத்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் இருக்கும் விதையாகும். விதையின் புறத்தூய்மை என்பது பயிர் விதையைத் தவிர பிற பயிர் விதைகள், களை விதைகள் மற்றும் இதர தேவையற்ற பொருட்களின் கலப்பு இல்லாமல் இருத்தல் வேண்டும்.

நல்ல முளைப்புத்திறன் உள்ள விதைகளே சீராக வளர்ந்து சிறப்பான மகசூல் தரும். நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன் நெல்லுக்கு 80%, மக்காச்சோளம் 90%, சோளம், கம்பு மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு 75%, பயறு வகைகளுக்கு 75%, வெண்டைக்கு 65%, கத்தரி, தக்காளி, நிலக்கடலை 70%, மிளகாய் 60% மற்றும் ஏனைய பயிர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு இருந்தால் மட்டுமே போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும். விதையின் ஈரப்பதம் பயிருக்கு தகுந்தவாறு 7% முதல் 13% வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஈரப்பதம் இருந்தால் விதையின் ஆயுட்காலம் மற்றும் முளைப்புத்திறன் குறைந்து விடும். சரியான ஈரப்பதத்தில் உள்ள விதைகளையே பூச்சி நோய் தாக்குதலின்றி நீண்ட நாட்கள் சேமித்து வைக்கலாம்.

விவசாயிகள் தாங்கள் உபயோகிக்கும் விதைகளை சிவகங்கை – தொண்டி ரோடு, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் அமைந்துள்ள அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியை கொடுத்து ரூ.80/– கட்டணம் செலுத்தினால், அவ்விதை பரிசோதனை செய்யப்பட்டு முடிவறிக்கை வழங்கப்படும் என்று விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.பாலகணபதி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் விதை ஆய்வு குழுவினர் ஆய்வு

தஞ்சாவூர், ஜூன் 5

தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரின் அறிவுரைப்படி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் திருச்சி விதை ஆய்வு துணை இயக்குனர் கண்ணன் தலைமையில், விதை ஆய்வாளர்கள் மோகன்தாஸ், சிவக்குமார் உள்ளிட்ட குழுவினர் கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், அம்மாபேட்டை, கும்பகோணம் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்க்கொண்டனர்.

நடப்பு குறுவை பருவத்தில், நெல் நாற்றங்கால் மற்றும் நடவு பணிகளில் விவசாயிகள் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர். விதைப்புக்கு தேவையான விதைகள் இருப்பு வைக்கப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்கள் மற்றும் அரசு விரிவாக்க மையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விதை சட்டப்படி விதைகள் விற்பனை செய்ய வழங்கப்பட்ட உரிமங்கள், விதை உரிமங்கள் நடப்பில் உள்ள விவரங்கள், குறுவை பருவ விதைகள் இருப்பு, கொள்முதல் செய்யப்பட்ட விதைகளின் இன்வாய்ஸ், முளைப்பு அறிக்கைகள், பதிவு சான்றுகள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் ரசீதுகள் ஆகியவை சரிபார்க்கப்பட்டன. விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்களிடம் மட்டுமே ரசீது பெற்று விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும் என்றும் விதை விற்பனை உரிமம் பெறாமல் விதை விற்பனை செய்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தனர். தனியார் விதை விற்பனையாளர்கள் ரசீது இல்லாமல் விற்றாலோ, கூடுதல் விலைக்கு விற்பனை செய்தாலோ விதைச்சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை, 1983 கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தனர். ஆய்வின் போது 39 விதை விற்பனை நிலையங்களில் 46 நெல் விதை அலுவலக மாதிரிகள் முளைப்பு திறன் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்டு விதை பரிசோதனை ஆய்வு நிலையத்திற்கு அனுப்பபட்டன. விதை சட்ட விதிகளை மீறிய ரூபாய் 6.06 லட்சம் மதிப்புள்ள 13740 கிலோ விதைகளுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது. தஞ்சாவூர் விதை ஆய்வு துணை இயக்குனர் சுஜாதா, விதை ஆய்வாளர்கள் பாலையன், சுரேஷ், நவீன் சேவியர், சத்யா உடனிருந்தனர்.

# உயிர்ம வேளாண்மையில் இயற்கை முறையில் மண்வளம் பாதுகாப்பு

உயிர்ம வேளாண்மை இந்தியாவின் மொத்த சாகுபடி நிலப் பரப்பான 140.1 மில்லியன் ஹெக்டரில் 2.3 மில்லியன் ஹெக்டர் சாகுபடி செய்யப்படுகிறது. அதாவது 2% மட்டுமே உயிர்ம வேளாண்மை சாகுபடி செய்யப்படுகிறது.

உயிர்ம வேளாண்மை என்பது நீடித்த நிலையான, சுற்றுச்சூழலை பாதிக்காத, மண்வளத்தை பாதுகாக்கும், நச்சு இல்லா உணவு, மனித வள நலனை பாதுகாக்கும் ஒரு தற்சார்பு வேளாண்மையே உயிர்ம வேளாண்மை ஆகும்.

நீடித்த நிலையான வேளாண்மைக்கு மண்ணில் உள்ள கரிம சத்து அதாவது உயிர்ம கார்பன் மிகவும் முக்கியமானதாகும். உயிர்ம கார்பன் மண்ணின் காற்றோட்டம், மண்வளம், மண் நீர் பிடிப்பு தன்மையை தீர்மானிக்கும். மண்ணில் உள்ள உயிர்ம கார்பன் அளவே மண்ணின் வளத்தினை தீர்மானிக்கின்றது.

**கோடை உழவு**

உயிர்ம வேளாண்மையில் மண்வளப் பாதுகாப்பில் கோடை உழவு மிக முக்கியமானதாகும். கோடை உழவு செய்வதனால்

1. மண்ணில் உள்ள கூட்டு புழுக்கள் அழிக்கப்படுகின்றது.

2. கோடையை தொடர்ந்து வரும் மழைகாலங்களில் கோடை உழவு செய்யப்பட்ட நிலம் அதிக நீர் பிடிப்பு தன்மையை பெருகிறது.

3. கோடை உழவின் மூலம் பூஞ்சைகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

4. கோடை உழவின் போது மண்ணில் மக்காத நிலையில் உள்ள உயிர்ம பொருட்கள் மக்க வைக்கப்படுகிறது.

5. களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

உயிர்ம கார்பன் அளவை அதிகரிக்கும் பசுந்தாள் உரப்பயிர்கள், பசுந்தழை பயிர்கள், மண்புழு உரம், அசோலா, நீலப்பச்சை பாசியின் பயன்பாடுகள்

**I. பசுந்தாள் உரப்பயிர்கள்**

பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்யும் நிலத்திலேயே பயிரிட்டு அவை பூக்கும் தருணத்தில் மண்ணில் மடக்கி உழ வேண்டும். 20 முதல் 25 நாட்கள் மண்ணில் நன்கு மட்க செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வதினால், மண்ணில் உள்ள உயிர்மத் தன்மை அதிகரிக்கும்.

### 1. மணிலா அகத்தி



மணிலா அகத்தி

எல்லா பருவங்களிலும் சாகுபடி செய்ய லாம். களிமண் மற்றும் செம்மண் நிலங் களுக்கும் ஏற்றது. ஒரு ஹெக்டருக்கு 40 கிலோ விதையை நன்கு அடர்த்தியாக தெளிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாசனம் செய்து பூ பூக்கும் தருணத்தில் அல்லது 45 நாளில் மடக்கி உழுது மட்க செய்ய வேண்டும். இதன் மூலம், 20 மெ.டன் பசுந்தாள் உரம் மண்ணில் மட்க செய்யப்படுகிறது. மணிலா அகத்தியில் 2.7% தழைச்சத்தும், 0.53% மணி சத்தும், 2.21% சாம்பல் சத்தும் கிடைக்கும்.

### 2. சணப்பு



சணப்பு உரப்பயிர்

எல்லா பருவங்களிலும் சாகுபடி செய்ய லாம். வண்டல் மண் நிறைந்த பகுதிக்கு ஏற்றது. ஒரு ஹெக்டருக்கு 25 முதல் 30 கிலோ விதையை நன்கு அடர்த்தியாக தெளிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாசனம் செய்து பூ பூக்கும் தருணத்தில் அல்லது 45 நாளில் மடக்கி உழுது மட்க செய்ய வேண்டும். இதன்மூலம், 13 முதல் 15 மெ.டன் பசுந்தாள் உரம் மண்ணில் மட்க செய்யப் படுகிறது. சணப்பில் 2.3% தழைச்சத்தும், 0.5% மணி சத்தும், 1.8% சாம்பல் சத்தும் கிடைக்கும்.

### 3. தக்கை பூண்டு



தக்கைப் பூண்டு உரப்பயிர்

பருவ மழையை தொடர்ந்து வரும் நாட்களில் மண்ணில் ஈரப்பதம் இருப்பின் எல்லா வகை நிலங்களிலும் பயிரிடலாம். குறிப்பாக சேடை உழவிற்கு சிறந்தது. ஒரு ஹெக்டருக்கு 50 கிலோ விதையை நன்கு அடர்த்தியாக தெளிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாசனம் செய்து பூ பூக்கும் தருணத்தில் அல்லது 40 முதல் 45 நாட்களில் மடக்கி உழுது 15 முதல் 20 நாட்கள் மட்க செய்ய வேண்டும். இதன்மூலம், 20 மெ.டன் பசுந்தாள் உரம் மண்ணில் மட்க செய்யப்படுகிறது. தக்கை பூண்டில் 3.5% தழைச் சத்தும், 0.6% மணி சத்தும், 1.27% சாம்பல் சத்தும் கிடைக்கும்.

### 4. கொளுஞ்சி

பருவ மழையை தொடர்ந்து வரும் நாட்களில் மண்ணில் ஈரப்பதம்

இருப்பின் எல்லா வகை நிலங்களிலும் பயிரிடலாம், குறிப்பாக தோட்டக்கால் நிலங்களுக்கு சிறந்தது. ஒரு ஹெக்டருக்கு 15 முதல் 20 கிலோ விதையை நன்கு அடர்த்தியாக தெளிக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாசனம் செய்து பூ பூக்கும் தருணத்தில் மடக்கி உழுது 15 முதல் 20 நாட்கள் மட்க செய்ய வேண்டும். இதன் மூலம், 6 முதல் 7 மெ.டன் பசுந்தாள் உரம் மண்ணில் மட்க செய்யப்படுகிறது.

**5. நவதானிய பயிர்கள்**

பருவ மழையை தொடர்ந்து வரும் நாட்களில் மண்ணில் ஈரப்பதம் இருப்பின் எல்லா வகை நிலங்களிலும் பயிரிடலாம். குறிப்பாக தோட்டக்கால் நிலங்களுக்கு மிகவும் சிறந்தது. ஒரு ஹெக்டர் நிலத்திற்கு எல்லா பயறு வகைகளையும் சேர்த்து, 15 முதல் 20 கிலோ விதை எடுத்து கொண்டு நெருக்கமாக தெளிக்க வேண்டும். 10 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாசனம் செய்ய வேண்டும். 40 முதல் 45 நாட்களில் மடக்கி உழுது மட்க செய்ய வேண்டும். இதனால், 10 முதல் 15 மெ.டன் பசுந்தாள் உரம் மண்ணில் மட்க செய்யப் படுகிறது.

**II. பசுந்தழை உரம்**

பசுந்தழை உரம் என்பது வயல் வரப்புகள் தரிசு நிலங்கள், சாலை ஓரங்கள் மற்றும் காடுகளில் வளரும் மரங்களின் இலைகள், சிறுகுச்சிகள், கொம்புகள் ஆகியவை பசுந்தழை உரமாகும். வேம்பு, எருக்கு, புங்கண், ஆடாதொடை ஆகியவை சிறந்த பசுந்தழை உரமாகும். வேம்பின் கசப்பு, புங்கண் இழையின் உவர்ப்பு தன்மை, மண்ணில் உள்ள புழுக்கள், வேர் புழுக்கள் மற்றும் கூட்டுப் புழுக்களை அழிக்கிறது. எருக்கில் அதிகளவில் போரான் நுண்சத்து உள்ளது சிறப்பாகும்.

**பசுந்தழை உரங்களின் நன்மைகள்**

1. மண்ணின் இயற்பியல் தன்மையை பாதுகாத்து, மண்ணை பொளபொளப்பாக்கும்.

2. மண்ணின் கார அமில தன்மையை சீராக்கும்.

3. மண்ணில் நுண்ணுயிர்கள் பெருக்கமடையும்.

4. மண்ணில் காற்றோட்டம் வளப்படும்.

5. மண்ணில் நுண்சத்துகள் அதிகரிக்கும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## III. மண்புழு உரம்




மண்ணின் வளத்தை மேம்படுத்துவதில் மண்புழு உரம் முக்கிய பங்காற்றுகிறது. மண்புழு உரத்தில் எண்ணற்ற நுண் சத்துகள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகள் உள்ளன.

### மண்புழு உரத்தின் பயன்கள்

1. மண்ணின் உயிர்ம தன்மையை அதிகரிக்க செய்யும்.
2. மண்ணில் நுண்ணுயிர் பெருக்கத்தை அதிகரிக்க செய்கிறது.
3. வேர் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும்.

## IV. அசோலா மற்றும் நீல பச்சை பாசி

அசோலா பெரணி வகை சார்ந்த தாவரமாகும். இதன் இலைகளின் அடிப்பாகத்தில் அனபீனா அசோலா என்னும் நன்மை செய்யும் உயிரி கூட்டாக வாழும். இதுவே, காற்றில் உள்ள தழைச் சத்தினை கிரகித்து தாவர புரதமாக மாற்றி சேமித்து வைக்கிறது. இதனால், தழைச்சத்து தாவரங்களுக்கு இயற்கையாக கிடைக்கிறது. மேலும், அசோலா மூலம் அதிகளவில் உயிர்ம கார்பன் கிடைக்கிறது. மண்வளம் மேம்படுத்தப்படுகிறது. நெல் வயல்களுக்கு மிகவும் உகந்ததாகும்.

## V. உயிர் உரங்கள்

அசோஸ்பைரிலம், பாஸ்போ பாக்டீரியம், ரைஸோபியம் போன்ற உயிர் உரங்களை பயன்படுத்தியும் மண்வளத்தினை மேம் படுத்தலாம்.

அசோஸ்பைரிலம் வளிமண்டல தழைச்சத்தினை கிரகித்து மண்ணில் நிலை நிறுத்தி பயிர்களுக்கு கிடைக்கச் செய்கிறது. பாஸ்போ பாக்டீரியம் மண்ணில் கரையா நிலையில் உள்ள மணிச் சத்தினை கரைத்து பயிர்களுக்கு கிடைக்கச் செய்கிறது. ரைஸோபியம் பயறு வகைகளின் வேர் முடிச்சுகளில் தழைச் சத்தினை நிலை நிறுத்தி பயிர்களுக்கு கிடைக்கச் செய்கிறது.

விவசாயிகள் மேலும் தங்களுக்கு தேவைப்படும் விவரங்களுக்கு திருச்சிராப்பள்ளி, புத்தூர் நான்கு ரோட்டில் உள்ள விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரிலோ அல்லது அலுவலக தொலைபேசி எண் 0431 - 2420133 மற்றும் உயிர்மச்சான்று ஆய்வாளர் ந.சபாபதியை தொடர்பு கொள்ளலாம் என விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி கூறியுள்ளார்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396